OS.No. : 10/2019

நாள் : 08.07.2025

பி.வா.சா. : 1

பெயர் : சேகர்

**மனுவின் பேரில் பிரதிவாதி சாட்சி 1 திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ACS மற்றும் LLB வரை படித்துள்ளேன். எனக்கு 1980ல் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு என் மனைவியுடன் வேலை நிமித்தமாக வடலூருக்கு வந்துவிட்டேன். அப்போது நெய்சர் இந்தியா நிறுவனத்தில் பணியாற்று வந்தேன். வடலூரில் 12 ஆண்டுகள் வசித்தேன். அதன்பிறகு இன்றுவரை சென்னையில் தான் வசித்து வருகிறேன். தாவா 2ம் ஐட்ட சொத்தில் நான் வேலை நிமித்தமாக வெளியூர் வந்தபிறகு வசிக்கவில்லை. குடும்ப அட்டையில் எப்போதும் இருந்ததில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு குடும்ப அட்டையில் என் பெயர் இருந்தது என்று காட்ட ஆதாரம் எதுவும் தற்போது தாக்கல் செய்யமுடியாது. என் பெயர் குடும்ப அட்டையில் இல்லாததால் தான் தாக்கல் செய்ய முடியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி இறந்து போன பழனி கல்லூரி பேராசியராக இருந்தவர். நானும் பழனியும் மட்டும் தான் மேற்படிப்பு படித்தோம் என்றாலும் 2ம் பிரதிவாதிதான் 10ம் வகுப்பு வரை படித்துவிட்டு குடும்பத்தை பார்த்து வந்தார் என்றால் சாட்சி 8வது வரை படித்தார் குடும்பத்தை பார்க்கவில்லை. என் தாயாரை கவனித்து கொண்டு 2ம் பிரதிவாதி 2ம் ஐட்ட சொத்தில் தான் இருந்து வந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. என் அம்மா 80 வயதில் காலமானார். என் அம்மா இறக்கும்வரை 2ம் பிரதிவாதிதான் பார்த்துக்கொண்டார் என்றால் சாட்சி அவருடன் இருந்தார் ஆனால் பார்த்துக்கொண்டாரா என்று தெரியாது. 1ம் ஐட்ட சொத்தில் 2ம் பிரதிவாதி

8.7.25

தான் விவசாயம் செய்தார் என்றால் சாட்சி கொஞ்சநாள் பார்த்துவிட்டு பிறகு முடியாது என்று சொன்னதால் சுமார் 2 ஏக்கர் நிலத்தை என் தங்கை பத்மாவின் திருமண செலவிற்காக விற்றோம். தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதிதான் செலவு செய்து 60 வருடங்களாக பராமரித்து வருகிறார் என்று சொன்னால் அது சரியல்ல. என் அம்மா உடல் நிலை சரியில்லாதபோது 2ம் பிரதிவாதி தான் மருத்துவ செலவு செய்து கவனித்து வந்தார் என்றால் அது சரியல்ல. நான் விடுப்பு எடுத்து வந்து என் அம்மாவை பார்த்துக்கொள்ளவில்லை. மருத்துவ செலவிற்கு மட்டும் அவ்வப்போது பணம் அனுப்புவேன். அதற்கான வங்கி ஆதாரங்களை என்னால் தாக்கல் செய்யமுடியும். இறந்து போன 3ம் பிரதிவாதி என் அம்மாவை விடுப்பு எடுத்து வந்து கவனித்ததில்லை. சில சமயங்களில் என் தாயார் போய் அவர்களின் பாண்டிச்சேரி வீட்டில் இருப்பார். ஆனால் முழுமையாக அவர் என் தாயரை பார்த்துக்கொண்டதில்லை. நான் என்னுடைய உழைப்பில் வந்த வருமானத்தை வைத்து கோயம்பேட்டில் ஒரு அடுக்கு மாடி குடியிருப்பில் ஒரு சிறு பகுதியும் வடலூரிலும் ஒரு காலிமனையும் வைத்துள்ளேன். 3ம் பிரதிவாதி பழனியும் பாண்டிச்சேரியில் சொந்தமாக வீடு வைத்துள்ளார். 2ம் பிரதிவாதிக்கு எந்தவித தனிப்பட்ட சொத்தும் இல்லை என்றால் அது சரிதான். தாவா 2ம்ஐட்ட சொத்தில் தான் அவர் குடியிருக்கிறார் என்றால் சரிதான். 01.03.2019 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு (வாசாஆ 8) கொடுத்தார் என்றால் சரிதான். அதற்கு நான் 16.03.2019 அன்று வாசாஆ 9 பதிலறிவிப்பு கொடுத்தேன். அதற்கு எனது வழக்கறிஞருக்கு விவரம் சொன்னதுநான் தான். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அந்த பதில் அறிவிப்பில் 3ம் பாராவில் என்னுடைய தந்தையார் சொத்துக்களை வாங்குவதற்கு எந்த பங்களிப்பும் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் என்னுடைய

8.7.25

வழக்கறிஞர் நான் சொன்ன விவரங்களை சரியாக புரிந்து கொள்ளாமல் அவ்வாறு பதில் கொடுத்துவிட்டார். 4வது பாராவில் 50 சதவித பங்களிப்பை என் அம்மா செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் என் தாயாருக்கு படிப்பறிவு உண்டு என்று சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி வக்கீலாக எழுதிக்கொண்டார் என்று சொல்கிறார். என் அம்மா 4வது வரை படித்துள்ளதாகவும் அவர் திறமையாக குடும்பத்தை வழிநடத்தியதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் எங்கள் அம்மா நன்றாக குடும்பத்தை நிர்வாகம் செய்தார் அவரால் தான் நாங்கள் படித்து உயர்ந்துள்ளோம். என் தாயார் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கையெழுத்து போடக்கற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல அதற்கு முன்பே அவர் கையெழுத்து போடுவார். 2ம் ஐட்ட சொத்தை என் அப்பா மட்டும் வாங்கவில்லை என் தாயாருக்கும் பங்களிப்பு உண்டு. பிடாரி மேலவீதியில் உள்ள சொத்தும் என் அம்மாவின் முழுமையான பங்களிப்பில் தான் அந்த சொத்து வாங்கப்பட்டது. எனது வாசாஆ 9 பதிலறிவிப்பில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை அதனால் தான் அந்த வக்கீலை மாற்றி வேறு வக்கீல் வைத்துள்ளேன். 1978ல் என் அப்பா இறப்பதற்கு முன்பு 7 ஆண்டுகளுக்கு முன்பே மது பழக்கத்திற்கு அடிமையாகி பத்திரங்களை அடமானம் வைத்து கடன்களை ஏற்படுத்தி குடும்பத்தையே நாசம் செய்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி வழக்கறிஞர் பதிலறிவிப்பில் மிகைப்படுத்தி சொல்லிவிட்டார் என்கிறார். என் அப்பா முதல் மகளுக்கு மட்டும் தான் திருமணம் செய்து வைத்தார். மற்ற பெண்களுக்கு நாங்கள் தான் திருமணம் செய்து வைத்துள்ளோம் என்றால் சரிதான். 1ம் ஐட்ட சொத்து என் அப்பாவால் ஏற்பட்ட கடன்களை தீர்ப்பதற்காக விற்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற பெண் பிள்ளைகளுக்கு நான் என் அம்மா,பழனி, ஆறுமுகம்

8-7-25

ஆகியோர் சேர்ந்து செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாக வாசாஆ 9ல் சொல்லியுள்ளோம் என்றால் அது தவறு.

8.7.25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கும் அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

8/7/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

OS.No. : 10/2019

நாள் : 14.11.2024

பி.வா.சா. : 1

பெயர் : சேகர்

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய தந்தை வடிவேல்செட்டியார் அவர்களால் தனது சொந்த சம்பாத்தியத்தை கொண்டு கிரயம் பெறப்பட்டவை என்றால் சரி. தாவா சொத்துக்கள்அனைத்தும் என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்துக்கள் என்பதால் என் தாயார் 23.02.2011 அன்று 2ம் பிரதிவாதி ஆறுமுகத்திற்கு செட்டில்மென்ட் எழுதிவைக்க உரிமை இல்லை என்று சொல்கிறேன் என்றால் இல்லை. அந்த செட்டில்மெண்ட் செல்லாது என்று சொல்கிறேன். தாயாருக்கு உடல்நிலையும் மனநிலையும் சரியில்லாதபோது தகப்பனார் சொத்துகள் குறித்து 11.10.1999 அன்று உயில் எழுதி வைக்க உரிமையில்லை என்று சொன்னால் தவறு. மேற்படி உயில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. சென்னை போன்ற ஊர்களில் மட்டும்தான் நடைமுறை படுத்தவேண்டும். சீர்காழி, மயிலாடுதுறை போன்ற ஊர்களில் நடைமுறை படுத்தவேண்டிய அவசியம் இல்லை. உயில் நடைமுறை படுத்தப்பட்டிருக்கிறது. நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் உயில் நடைமுறை படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. பொது குடும்ப வருமானத்தை கொண்டு தான் பெண்களுக்கு திருமணம் நடத்தப்பட்டது என்றாலும் தாயாருக்கு மருத்துவ செலவு செய்யப்பட்டது என்றாலும் நான் எந்த செலவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை அனைவரும் சரிசமமாக அடைய வேண்டுமென்றுதான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. வாதிகள் கோரியபடி அவர்கள் கோரிய வீதத்தில் பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தது குடும்பம் அமைத்து வைத்தது நானும் என் அம்மாவும் எனது இன்னொரு தம்பியும் சேர்ந்து அதனால் உயிலில் இது பற்றி விளக்கமாக சொல்லி சொத்து எங்களுக்கு என்று குறிப்பிட்டுள்ளார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உயில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றாலும் தாவா சொத்துக்களை அனைவரும் பொதுவாக அனுபவித்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி மற்றும் அவரது வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் அது சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

14/11/24
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

14/11/24

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 1 | நாள் :18.10.2024 | |
| அசல் வழக்கு எண். | 10/2019 | | |
| பெயர் | சேகர் | த/பெ | வடிவேல் |
| வயது | 67 | தொழில் | consulting |
| ஜாதி | — | மதம் | இந்து |
| கிராமம் | குமரன்நகர் | தாலூக்கா | சென்னை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

[signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 18/10/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

[signature]
18/10/24

OS.No. : 10/2019

நாள் : 15.07.2025

பி.வா.சா. : 1

பெயர் : சேகர்

**இடை மனு எண்கள் 8/24 மற்றும் 9/2024 மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பேரில் பிரதிவாதி சாட்சி 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை**

என் அம்மா திரிபுரம் அம்மாள் 11.10.1999 அன்று ஒரு பதிவு செய்த உயில் எழுதிவைத்துள்ளார் அதன் **பதிவு நகல் பிவாசா 1** (ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) ஆகும். அந்த உயில் ஆவணத்தின் அசல் என் தம்பி 3ம் பிரதிவாதி வசம் உள்ளது. என் அம்மா இறக்கும் தருவாயின் 3ம் பிரதிவாதியிடம் அவர் இருந்ததால் எல்லா ஆவணங்களும் அவர் வசமே இருக்கிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அம்மா திரிபுரத்தம்மாளுக்கு உயில் பத்திரம் எழுதிவைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. அந்த உயில் நடைமுறைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா இறந்தவுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. வாதிகள் தாவா சொத்துக்களை அனைவரும் சரிசமமாக அடையவேண்மென்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவிற்கு சொந்தம் என்றாலும் அதில் என் அம்மாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

உயில் ஏற்படுத்தப்பட்ட அன்று நானும் என் தம்பியும் சீர்காழியில் தான் இருந்தோம். அந்த உயிலை பத்திர எழுத்தரை வைத்து எழுதினோம். பத்திர எழுத்தர் பெயர் நினைவில்லை. என் அம்மா எல்லா மூலபத்திரங்களையும் பார்த்து தான் இந்த உயிலை எழுதினார். உயிலில்

மூன்று ஐட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன. உயிலில் 1ம் ஐட்ட சொத்து என்பது 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்த கடை என்றால் அது சரியல்ல. என் அம்மாவிற்கு 10 ஆண்டுகளாக சிறுநீரக கோளாறு, நீரிழிவு நோயினால் கஷ்டப்பட்டார். 2ம் பிரதிவாதியை தான் நம்பியிருந்தார். 1ம் ஐட்ட சொத்து என் அம்மா பெயரில் என் அப்பா எழுதிவைத்த சொத்து என்றால் உண்மை. அது என் அம்மாவால் வாங்கப்பட்டது என்றாலும் என் அப்பாவிற்கு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து அல்ல என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2, முதல் 4ம் ஐட்ட சொத்துகள்ள என் அப்பாவிற்கு சொந்தமாக தனிப்பட்ட ஆவணங்கள் மூலமாக கிடைத்த சொத்துக்கள் ஆகும். என் அப்பா சொத்துக்களை பொறுத்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்து விட்டார். அதனால் என் அப்பாவின் சொத்துக்களை பொறுத்து உயில் எழுத என் அம்மாவிற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. உயில் எழுதப்பட்ட காலத்தில் என் அம்மா நோயின் தொடக்கநிலையில் இருந்தார். சாட்சிகள் எங்கள் தெருவில் உள்ளவர்கள் தான். நாங்கள் அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல என் அம்மா கேட்டுக்கொண்டதால் அவர்கள் வந்தார்கள். மூன்று பேருமேஉயிருடன் இல்லை. உயில் ஆவணத்தை தயார் செய்தவர் பெயரில்லை என்றால் சரியல்ல. அந்த உயில், என் அம்மாவிடம் இருந்தது. என் அம்மாவிற்கு பிறகு 2ம் பிரதிவாதி அவர் அனைத்தையும் வசப்படுத்திகொண்டார். அந்த உயிலே செல்லாது என்பதால் அது என் அம்மா வசமே இருந்தது என்றால் சரியல்ல. உயில் ஜெராக்ஸ் காப்பி என் வசம் உள்ளது. அந்த உயில் பத்திரத்தில் என் பாகத்தையும் 3ம் பிரதிவாதியின் பாகத்தையும் விற்க நேரிட்டால் அதை 2ம் பிரதிவாதி வசம் தான் விற்க வேண்டும் என்று நிபந்தனை உள்ளது என்றால் சரிதான்.

மூன்றாவது நபருக்கு விற்க கூடாது என்று உள்ளது. ஆறுமுகம் உள்ளூரில் இருப்தாலும் மற்றவர்கள் வெளியூரில் இருப்பதால் இவ்வாறு நிபந்தணை விதிக்கப்பட்டது என்றால் சரி. என் அம்மாவிற்கு இந்த உயில் எழுதுவதற்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. மறுபடியும் அந்த உயிலின் ஒரு பகுதியை மட்டும் நடைமுறைபடுத்த விரும்பாமல் வேறு ஏற்பாடு செய்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பாதக்குடி நிலத்தை விற்று விட்டதால் தான் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் வெளியூருக்கு போய்விட்டதால் 40 ஆண்டுகாலம் என் அம்மாவை 2ம் பிரதிவாதிதான் பாதுகாத்து பராமரித்ததாலும் அவர் பெயருக்கு வழக்கு 4ம் ஐட்ட சொத்தை பொறுத்து ஒரு பதிவு பெற்ற செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார் என்றால் சாட்சி அது சரியல்ல என்கிறார். அதனால் தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பில் ஒரு நிலைப்பாடும், எதிர்வழக்குரையில் ஒரு நிலைப்பாடும் நிரூபண வாக்குமூலத்தில் வேறு ஒரு நிலைப்பாடும் என மூன்று நிலைப்பாடுகள் எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துச் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது:

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

15/7/25